0 9039

வருவாய் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600009

கடித எண்.47676/நி.சீ.I (2)/2011-4, நாள்.04.10.2012.

அனுப்புநர்
திரு ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர் /நிலச் சீர்திருத்த ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–5.

அம்மையீர்,

பொருள்: நலத்திட்டம் – முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டம் – திருமண உதவி, இயற்கை மரணம், விபத்து நிவாரணம் / காயம் மற்றும் ஈமச் சடங்கு உதவிகளை வேறு எந்தத் துறையில் பெற்றாலும் இத்திட்டத்தின் கீழ் கூடுதலாக வழங்கலாமா என என்பதற்கு தெளிவுரை கோரும் நிலச்சீர்திருத்த ஆணையரது கருத்துரு – தொடர்பாக.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண்.265, வருவாய் நாள் 10.9.2011.
2. நிலச்சீர்திருத்த ஆணையர் அவர்களின் கடித எண்.ஒ2/11622/2011 (நி.சி), நாள் 21.11.2011.

-----

பார்வையில் இரண்டில் கண்டுள்ள கடிதத்தின்மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. பார்வை இரண்டில் காணும் தங்களது கடிதத்தில், இயற்கை மரணம், விபத்து நிவாரணம் மற்றும் ஈமச்சடங்கு ஆகியவற்றுக்கான உதவித்தொகை வேறு எந்த துறையில் பெற்றாலும், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமும் உறுப்பினர்களுக்கு உதவித் தொகை வழங்கலாம் என அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் தெளிவுரை வழங்குமாறு அரசிடம் கோரப்பட்டுள்ளது.

3. மேற்படி செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்தது. அரசாணை (நிலை) எண் 265 வருவாய்த்துறை, நாள்.10.09.2011-ல் கல்வி உதவித் தொகையைப் பொறுத்த வரையில், வேறு எந்த துறையிலிருந்து கல்விக்கான நிதி உதவி பெற்றாலும் இத்திட்டத்தின் கீழ் மேற்கூறப்பட்ட இனங்களுக்கு கல்வி உதவியானது கூடுதலாக அமையும் என உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால் விபத்து நிவாரணம், இயற்கை மரணம் மற்றும் ஈமச் சடங்கிற்கான உதவித் தொகையினைப் பொறுத்தவரை, வேறு எந்த துறைகள் மூலம்

Verified RealEstate ™

உதவித் தொகை பெற்றாலும் இத்திட்டத்தின் கீழ் கூடுதலாக பெறுவது என்பது பயனாளிகளுக்கு இரட்டிப்பு பயனாக அமையும். மேலும் இதுபோன்ற கோரிக்கைகள் பிற அமைப்பு சாரா தொழிலாளர் நலத்திட்டங்களிடமிருந்து வரலாம் என்பதாலும் மற்றும் ஒரே நிகழ்வுக்கு இரண்டு அரசு திட்டங்களிலிருந்து உதவித் தொகை வழங்குவது ஏற்புடையதாகாது என்பதாலும் விபத்து நிவாரணம், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கான உதவித்தொகையினை பொறுத்தவரையில் வேறு எந்தத் துறைகள் மூலம் உதவித்தொகை பெற்றாலும், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கூடுதலாக உதவித்தொகை வழங்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் உரிய அறிவுரை வழங்கக் கோரும் தங்களது கருத்துருவை அரசு நிராகரித்துள்ளது என்பதை தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

9.10.12

அரசு முதன்மைச் செயலாளருக்காக

09/10/12

Verified RealEstate TM